ஏப்ரல் 2026
மலர் 24, இதழ் 7

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# அற்புதத்தின் ஆண்டவர்



# அற்புதத்தின் ஆண்டவர்

இஸ்ரவேலின் தேவனாகிய நான் : **உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து, வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கினார் (நீரூற்று). (ஏசாயா. 41 : 18)**

இம்மாதத்திலே ஆண்டவர் செய்த நம்பமுடியாத அற்புதங்களைக் குறித்து நாம் அறிந்து கொள்வோம். பழைய ஏற்பாட்டின் பெரிய தீர்க்கனான ஏசாயா, கர்த்தரைக் குறித்து என்ன கூறுகிறார்? மனிதனால் கூடாதது தேவனால் கூடும் என்ற வசனத்திற்கு ஏற்ப, ஏசாயா 41:18-வது வசனத்திலே மனிதனால் நம்ப முடியாத / செய்ய முடியாத காரியங்கள் தேவனால் மட்டுமே முடியும் என்று கூறுகிறார்.

*பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகள்!*
*வனாந்தரத்திலே தண்ணீர் தடாகம்!!*
*வறண்ட பூமியில் நீரூற்றுகள்!!!*

இந்த மூன்று காரியங்களும் எத்தனை பெரிய விஞ்ஞானிகள் வந்தாலும் எவ்வளவு டெக்னிக்கல், டெக்னாலஜி உபயோகப்படுத்தினாலும் தேவனால் செய்ய முடிந்த அதிசயங்களை மனிதனால் உருவாக்க முடியவே முடியாது. அப்பேர்ப்பட்ட தேவனுக்குப் பிள்ளைகளாக நாம் பிறந்திருக்கிறோம். நாம் எப்படி வாழ வேண்டும்? கர்த்தர் விரும்பும் பாதையிலே மனமாற்றம் பெற்ற பிள்ளைகளாக இருப்போமானால் நம் ஆண்டவர் மகிழ்ச்சி அடைவார்.

ஆபிரகாமின் மகனான ஈசாக்கு தன்னுடைய மந்தைக்கும் தன்னுடைய குடும்பத்துக்கும் தண்ணீர் வேண்டுமென்று, துரவை இரண்டு இடத்தில் வெட்டினார். ஆனால், தன்னுடைய மேய்ப்பர்களுக்கும் கேராரூர் மேய்ப்பர்களுக்கும் சண்டை வந்தபடியால் மூன்றாவதாக ஒரு துரவை ஈசாக்கின் மேய்ப்பர்கள், வெட்டினபோது, எந்தப் பிரச்சனையும் இல்லாமல் அங்கே மந்தைகளோடு தங்குவதற்கு கர்த்தர் இடம் உண்டாக்கினார் என்று சொல்லி அதற்கு ரெகொபோத் என்று பெயரிட்டான் (ஆதி. 26 : 22). தண்ணீருக்காக வந்த பிரச்சனைக்கு மனிதர்களால் தீர்வு கொண்டு வர முடியவில்லை. ஆனால், கர்த்தர் இடைப்பட்டு இரண்டாவது முற்பிதா தண்ணீரோடு வளமாக வாழ உதவினார்.

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் (4 சுவிசேஷ புத்தகம் மட்டும்) பார்த்தால் தேவனாகிய கர்த்தர் / நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் செய்த அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் படிக்கிறோம் / வாசிக்கிறோம் / தியானித்து இருக்கிறோம். இன்றைக்கு நாம் அறிந்து கொள்ள இருப்பது தண்ணீரிலே நாம் ஆண்டவர் செய்த அதிசயங்கள்.

உலக அதிசயங்கள் ஏழு என்று உலகத் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அவைகளெல்லாம் மனிதனால் உருவாக்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க கட்டிடக் கலை மற்றும் நினைவுச் சின்னங்களின் தொகுப்பாகும். இவையெல்லாம் மனிதன் சொல்லும் ஒரு வார்த்தையில் உருவாக்கப்பட்டவை அல்ல. அநேக ஆண்டுகளாக கட்டி உருவாக்கப்பட்டன. ஆனால், வேதாகமத்தில் உள்ள அதிசயங்கள் உருவாக்கப்பட்டவை அல்ல. தேவன் சொல்ல உண்டாக்கப்பட்டன. கர்த்தரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடந்த உண்மை நிகழ்வுகள். அதற்குக் காரணம் சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நம் ஆண்டவர். தண்ணீர், காற்று, மழை, கடல், ஆறு போன்ற எல்லா இயற்கையின் செயல்களையும் கட்டுப்படுத்துபவர் (Controller), தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர் நம் ஆண்டவர். **அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங். 33 : 9). ...அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது (சங். 148 : 5).**

பாருங்கள்! எத்தனையோ புயல், கனமழை, எரிமலை வெடிப்பு போன்ற பேரிடர் வந்தாலும், அதை எந்த ஒரு மனிதனாலும் இன்று வரை

கட்டுப்படுத்த முடியவில்லை. அதற்குக் காரணம், அவைகளை எல்லாம் படைத்தது மனிதனல்ல. நேற்றும், இன்றும், என்றும் மாறா நம் ஆண்டவராகிய கிறிஸ்து.

ஒரு கார் / பேருந்து / விமானம் பழுதுபட்டால் (Repair) அதனை சரிபார்த்து, திரும்ப ஓடவைப்பது மெக்கானிக் (Mechanic) அல்லது அது சம்பந்தப்பட்ட பொறியாளர் (Engineer) வேலை. மற்ற யாராலும் சரி செய்ய முடியாது. காரணம், அவைகளை உருவாக்கியது மனிதன். ஆகவே, அது சரியாக ஓட வேண்டுமானால் தவறு எங்குள்ளது என்பதை துல்லியமாக அவைகளை உருவாக்கியவன் கண்டுபிடித்து விடுவான். ஆனால், இயற்கையின் சீற்றத்தை மனிதனால் கட்டுப்படுத்த முடியாது. காரணம், அவைகளைப் படைத்தவர் தேவன். ஆகவே, தேவன் ஒரு வார்த்தை சொன்னால் போதும் அவருக்கு அனைத்தும் கட்டுப்பட்டு விடும்.

**காற்றையும் கடலையும் அதட்டினாரே தேவன்**
**சிங்கத்தின் வாயைக் கட்டினாரே தேவன்**
**அதிசயமானவரே, அற்புதமானவரே தேவன்**

விவிலியத்தில் தண்ணீரானது எப்படி கர்த்தருடைய சொல்லுக்கு / வார்த்தைக்கு கட்டுப்பட்டு காணப்பட்டது என்பதைக் குறித்துக் காணலாம்.

1. செங்கடலும் மோசே தீர்க்கனும்
2. யோர்தானும் தீர்க்கன்கள் இருவரும்
3. யோர்தானும் ஆசாரியர்களும்

மேலே உள்ள மூன்று அதிசயங்களும் பழைய ஏற்பாட்டில் உள்ளன. கடல் மற்றும் நதியின் தண்ணீரில் கர்த்தரின் கரம், சொல், வல்லமை, வார்த்தை எப்படிப்பட்டதாயிருந்தது? எப்படி தண்ணீர் கட்டுப்பட்டு பிளந்து ஒதுங்கியது, எப்படி கடல் மற்றும் நதியின் நடுவில் வெட்டாந்தரை உருவானது என்பதைக் குறித்தும் இன்றைய நாளில் நாம் தெரிந்து கொள்வோம்.

## 1. செங்கடலும் மோசே தீர்க்கனும்

**கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான் (மோசே) (யாத். 14 : 14).**

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி (ஆதி 15 : 13) ... **"உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே.... நானூறு வருஷம் உபத்திரவப்– படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்".**

ஏன் தேவன் எந்த ஒரு காரியத்தையும் வெளிப்படுத்துகிறார் என்றால் (ஆதி. 18 : 18) **"நான் செய்யப்போகிறதை ஆப்ரகாமுக்கு மறைப்பேனோ"** என்று கர்த்தர் கூறுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றி முப்பது வருடங்கள் (யாத். 12 : 40) எகிப்தை விட்டு கானான் தேசத்தைச் சேருவதற்கு எடுத்துக் கொண்ட காலம் நாற்பது வருடங்கள். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட நானூற்றி எழுபது வருடங்கள் இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தேசத்திலே சொல்ல முடியாத கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்தவர்கள். அவர்களின் கூக்குரலினிமித்தம் உன்னதத்திலிருந்து தேவன் இறங்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவது போல (சங். 103 : 13) என்ற வாக்குத்தத்தத்தைப் போல் இஸ்ரவேல் மக்களுக்காக நம் கர்த்தரின் உள்ளம் இரக்கம் கொண்டது.

எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் விடுதலை பெற, யாரை அனுப்புவது என்று தீர்மானித்து அக்கினியின் நடுவே இறங்கினார் நம் தேவன். எகிப்து திசை பக்கமே தலை வைத்துப் படுக்கக் கூடாது என்று தன் உள்ளத்தில் தீர்மானித்திருந்தான் எண்பது வயதைத் தாண்டிய மோசே என்பவன். எகிப்து தேசத்தை விட்டு வெளியே வந்த (40 வயதில்) மோசே மீதியான் தேசத்திற்குப் போய் குடியிருந்தான்.

## தேவனை எப்படிச் சந்தித்தான்?

**...முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார்... (யாத். 3 : 4).**

பழைய ஏற்பாட்டில் கர்த்தர் ஒரு மனிதனை அழைக்க வேண்டுமென்றால் இரண்டு முறை அழைப்பதைக் காணலாம்.

**ஆதி 22 : 11–இல் ஆபிரகாமே, ஆபிரகாமே என்று அழைத்தார். I சாமு 3 : 10–இல் சாமுவேலே, சாமுவேலே என்று அழைத்தார்.**

முதல் முற்பிதா, முதல் தீர்க்கதரிசி, முதல் மீட்பாளர் எல்லோரும் என்ன பதில் கூறினார்கள்? "இதோ அடியேன்" என்றார்கள். மரியாள் என்ன கூறினாள்? இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. வேதாகமத்திலே இடம் பெற்ற அனைவருமே கர்த்தரால் அழைப்பு பெற்றவர்களே. அதிலே சந்தேகமே வேண்டாம். ஒவ்வொரு பாத்திரமாகப் பார்த்தால் எல்லாரிடத்திலும் காணப்பட்டது / தனித்துவம் வாய்ந்த குணம். தன்னை சர்வ சிருஷ்டிக்கும், எஜமான் முன் தாழ்த்தி, தன் மாமனாரின் (எத்ரோ) ஆடுகளை கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக மேய்த்து வந்தான் மோசே. அன்றும் அப்படியே ஆடுகளை மேய்த்து ஓரேப் பர்வதமட்டும் வந்தான். மோசே பார்வோனின் அரண்மனையில் வளர்க்கப்பட்டபடியால், கர்த்தரைப் பற்றி எந்த ஒரு நற்செய்தியும் அறிந்ததில்லை / அறிய வாய்ப்பும் இல்லை. கர்த்தர் யார் என்றோ, எப்படிப்பட்டவர் என்றோ எதுவும் அறியாமல் வாழ்ந்து வந்த ஒரு மனிதனைத் தேடி நம் தேவன் அக்கினி ஜுவாலையில் நின்று மோசேக்கு தரிசனமானார்.

தேவன் தான் யார் என்பதையும், என்ன நோக்கத்தோடு வந்திருக்கிறார் என்பதைக் குறித்தும் மோசேயிடம் பேசுகிறார். தம்முடைய மக்களை எகிப்திலிருந்து மீட்டுவர ஒரு மீட்பின் நாயகனாக மோசேயைப் பார்த்தார்.

**மோசேயின் மீது தேவன் கொண்ட நோக்கம்:**

எகிப்து தேசத்தின் வளைவு சுளிவுகள் அனைத்தையும் அறிந்த ஒரே எபிரேயன் மோசே மட்டுமே. இஸ்ரவேல் மக்களின் கஷ்டங்களை நாற்பது வருடமாகப் பார்த்த ஒரே மனிதன். யாரிடம் எப்படிப்பேச வேண்டும் என்று நன்கு கற்றுத் தெரிந்தவன். ஆகவே, கர்த்தர் அநேக அற்புத அடையாளங்களை மோசே காணும்படிச் செய்தார். ஆனால் மோசே மீண்டும் எகிப்துக்கு செல்லக் கூடாது என்பதில் உறுதியாயிருந்தான்.

ஆகார் எப்படி மீண்டும் சாராளிடம் செல்லக்கூடாது என்று நினைத்த போது தேவன் சாராளிடமே செல்லும்படி ஆகாரை அனுப்பியது போல, இப்பொழுது மோசே சொன்ன வார்த்தையானது **…ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான் (யாத். 4 : 13).**

நம் தேவன் மிகவும் பொறுமையாக மோசேயுடன் பேசினார். மோசே தன்னுடைய பெலவீனங்களையெல்லாம் (திக்குவாய், மந்த நாவு) கர்த்தரிடம் கூறினான். மோசேக்குத் துணையாக செயல்பட மோசேயின் சொந்த சகோதரனான ஆரோனை அமர்த்தினார்.

இறுதியாக கர்த்தர் சொன்ன காரியங்களை மனதில் ஏற்றுக்கொண்டு 80 வயதான மோசேயும் 83 வயதான ஆரோனும் (யாத். 7 : 7) பார்வோனின் முன்னால் போய் நின்றனர்.

எகிப்து தேசத்திலே பத்து வகையான வாதைகளை மோசே மூலமாக தேவன் நடந்தேறச் செய்தார். பத்தாவது வாதையில் பார்வோன் பிடியிலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தை விட்டு மோசேயின் தலைமையில் புறப்பட்டனர்.

கானான் தேசத்தை நோக்கிப் புறப்பட்ட கர்த்தருடைய ஜனங்கள் எத்தனையோ கஷ்டத்தை மோசேக்கும், ஆரோனுக்கும் கொடுத்தார்கள். வணங்காக் கழுத்துள்ள ஜனம் என்று, கர்த்தரே கூறும் அளவிற்கு நடந்துக் கொண்டார்கள். அவர்கள் எத்தனைதான் முறுமுறுத்தாலும் கர்த்தர் கோபப்படாமல், இருபது லட்சம் மக்களுக்குத் தேவையான உணவு (மன்னா) மற்றும் காடைகளைக் கொடுத்து 40 வருடமாக பராமரித்தார் (யாத். 16 : 35). தண்ணீரைக் கேட்ட போது, கன்மலையைப் பிளந்து தாகத்தைத் தீர்த்தார்.

**சிவந்த சமுத்திரம் பிளந்து பிரிதல்:**

**"...கர்த்தர் இரா முழுவதும் பலத்த கீழ் காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டு போகப் பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று... அவர்கள் வலது புறத்திலும், அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது" (யாத். 14 : 21, 22).**

உலகத்திலே எத்தனையோ அற்புதங்களைக் குறித்து கேள்விப்பட்டிருப்போம். ஆனால், ஒரு சமுத்திரம் இரண்டாகப் பிரிந்து, நடுவில் வெட்டாந்தரையாக தோற்றமளித்தது உலக சரித்திரத்திலே மிகப்பெரிய அதிசய உண்மை நிகழ்வாகும்.

எகிப்தை விட்டு வந்த கர்த்தரின் ஜனங்கள், பார்வோனும் அவனுடைய சேனைகளும் சமீபித்து வருகிறபோது இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து எகிப்தியர் தங்களுக்கு பின்னே வருகிறதைக் கண்டு மிகவும் பயந்தார்கள்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; "**நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தை பிளந்து விடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள்**" என்றார் (யாத். 14 : 16).

இராமுழுவதும் எகிப்தியரின் சேனையும், இஸ்ரவேலரின் சேனையும், ஒன்றோடொன்று சேராதபடி மேக ஸ்தம்பம் நடுவில் வந்தது. எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது. இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.

மோசே தன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டினான். அப்பொழுது கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படிச் செய்து, அதை வறண்டு போகப்பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள். அவர்கள் வலது புறத்திலும், இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.

**பார்வோனையும், அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப் போட்டவரைத் துதியுங்கள்... (சங். 136 : 15).**

மீண்டுமாக மோசே தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டின போது, விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பி வந்தது.

சமுத்திரம் இரண்டாகப் பிரிந்தது ஒரு அதிசயம், மற்றும் ஓர் அற்புதம் என்னவென்றால் இரண்டாகப் பிரிந்த சமுத்திரம் மீண்டும் ஒன்றாய் சேர்ந்தது ஓர் மகாபெரிய அற்புதம்.

தேவனாகிய கர்த்தர் காட்டின கிருபையால், அன்பினால், இரக்கத்தினால் சமுத்திரத்தின் நடுவில் வெட்டாந்தரையில் நடந்து அக்கரைப்பட்டுப் போன பிற்பாடு, மோசேயுடன் சேர்ந்து இஸ்ரவேல் ஜனங்கள் தேவனைப் போற்றிப் பாடிய பாடல் உலக வரலாற்றில் முதன் முதலில் எழுத்துருவில் குறித்து வைக்கப்பட்ட பாடல்....

கர்த்தாவே தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?
வானத்திலும், பூமியிலும் உமக்கு ஒப்பானவர் யார்?
செங்கடல் தன்னைப் பிளந்து அதில் ஜனங்களை நடக்கச் செய்தீர்
நீர் நல்லவர், சர்வ வல்லவர், என்றும் வாக்கு மாறாதவர்

**2. யோர்தானும் தீர்க்கன்கள் இருவரும்**

**"...நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன? கேள் என்றான் எலியா. அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்க வேண்டுகிறேன் என்றான்" (2 இராஜா 2 : 9).**

**எலியா தீர்க்கன் :** எதிரிகளுக்குச் சவால் விட்டு, தேவனை நோக்கி ஜெபித்து, வானத்திலிருந்து அக்கினி இறங்கிவரப் பண்ணினதின் இரகசியம் **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நின்றான்.** கர்மேல் மலையில் பாகால்

தீர்க்கதரிசிகள் (450 பேர்) அரசர் (ஆகாப்) மற்றும் மக்கள் முன்பாக பகிரங்கமாக சவால் விட்டவன். தேவனோடு பேசினான். தேவனும் அவனுடன் பேசினார். உயிருடன் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது நபர்.

**எலிசா தீர்க்கன்:** ஊழியத்தைச் செய்ய உண்மையாக வாஞ்சித்த ஒரு மனிதன், அதற்காக இரட்டிப்பான வரத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். எலியாவிற்குப் பின் கர்த்தருடைய தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்வதற்கு எலிசாவை தேவன் தேர்ந்தெடுத்தார். ஊழியத்திலே எலியாவோடு போட்டிபோடாமல் கர்த்தர் சொல்லும் வரைக் காத்திருந்தார். எலியாவின் ஊழியத்தைப் போல் இரண்டு மடங்கு ஊழியம் செய்ய வேண்டுமென்ற வாஞ்சைக் கொண்டான்.

எலியா, எலிசா இரண்டு தீர்க்கன்களைக் குறித்து இன்னும் எத்தனையோ காரியங்கள் உள்ளன.

எலியா – எலிசாவோடு கில்காலிருந்து புறப்பட்டுப் போனான். போகும் வழியில் எலிசாவிடம் பின்வருமாறு எலியா கூறுகிறார்.

கர்த்தர் என்னை பெத்தேல் மட்டும் போக அனுப்புகிறார். நீ (எலிசா) இங்கே இரு என்றான்.

அதற்கு எலிசா, நான் உம்மை விடுகிறதில்லை என்று உம்முடைய ஜீவனைக் கொண்டும், கர்த்தரின் ஜீவனைக் கொண்டும் சொல்லுகிறேன், என்று சொல்லி இருவரும் சேர்ந்தே பெத்தேலுக்குப் போனார்கள்.

பெத்தேலில் இருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசா விடம் வந்து, உன் எஜமானை (எலியா) கர்த்தர் உன்னைவிட்டு இன்று எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள்.அதற்கு எலிசா **எனக்குத் தெரியும் சும்மா இருங்கள்** என்றான்.

அதேபோல் எரிகோ பட்டணம், யோர்தான் போன்ற இடங்களுக்குப் போகும் போதும் இதே மாதிரியான வார்த்தைகளை அந்தந்த இடத்து தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலியாவைப் பற்றிக் கூறும் போதெல்லாம் எலிசா இதே பதிலைக் கூறுகிறான். இருவரும் பேசிக் கொண்டே வந்து யோர்தான் கரையிலே நின்றார்கள்.

**<u>எலியா செய்த அற்புதம்:</u>**

எலியா தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான். அது இரு பக்கமாகப் பிரிந்தது. எலியாவும், எலிசாவும் உலர்ந்த தரை வழியாய் யோர்தானின் அக்கரைக்குப் போனார்கள் (2 இரா. 2 : 8). விசுவாசத்தினால் எலியா பல அற்புதங்களைச் செய்தான். தைரியமாக அரசருக்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைத்தான். இப்படிப்பட்ட எலியா தன்னோடே எலிசாவையும் அழைத்துக் கொண்டு யோர்தான் வரை செல்லுகிறான். யோர்தானைக் கடந்து அக்கரைக்குச் செல்லும் போது, எலியா தன் தோளின் மேல் உள்ள சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரின் மேல் அடித்த போது, நடுவில் (வெட்டாந்தரை) **உலர்ந்த தரை வழியாக இருபுறமும் தண்ணீர் பிரிந்து நின்றது.** அதன் வழியாக இருவரும் நடந்து யோர்தானின் அக்கரைக்குச் சென்றனர்.

**<u>எலிசா கண்ட மகத்துவமான காட்சி:</u>**

நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள் என்றான் எலியா.

இருவரும் யோர்தானின் அக்கரைக்குச் சென்றது எப்படி என்று எலிசா தன் கண்களால் கண்டபடியால் அவன் மிகவும் அதிசயத்துப் போனான். அப்போது எலியா – எலிசாவை நோக்கி, ‘‘நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படு முன்னே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன? உன்னுடைய உள்ளத்திலே நீ நினைப்பது என்ன கேள்? என்று எலியா கேட்டான்.

உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாகக் கிடைக்க வேண்டுகிறேன் என்றான் – எலிசா.

**<u>எலிசாவின் உள்ளம் எப்படிப்பட்டது?</u>**

தாவீது ராஜாவின் மகனான சாலொமோன் கர்த்தரிடம் என்ன கேட்டான்? எண்ணிக்கைக்கு

அடங்காத உம்முடைய ஜனத்தை நியாயம் விசாரிக்க எனக்கு ஞானம் வேண்டுமெனக் கேட்டான். இங்கே எலியா தீர்க்கன் கேட்டபோது, எலிசா சிறிதும் யோசிக்காமல் சட்டென்று கூறி விடுகிறான்.

உம்மிடத்தில் உள்ள ஆவியின் வரம் இரட்டிப்பாக எனக்கு கிடைக்க வேண்டுகிறேன் என்றான் எலிசா.

சாலொமோன் மற்றும் எலிசா இரண்டு பேரும் தங்களுடைய சொந்த நலனுக்காக எதையுமே கேட்காமல் சாலொமோன் தன் நாட்டு மக்களை நல்ல முறையில் நியாயம் செய்ய கர்த்தரிடம் ஞானத்தையும், எலிசா தீர்க்கன் நேரிடையாக எலியாவிடம் பரிசுத்தாவியின் துணையோடு ஊழியம் செய்வதற்காக இரட்டிப்பான வரத்தைக் கேட்டனர்.

எலியாவும், எலிசாவும் பேசிக் கொண்டே போகும் போது, அவர்கள் இருவரையும் அக்கினி ரதமும், குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்.

**<u>எலிசாவின் புலம்பல்:</u>**

தன்னிடமிருந்து எலியா பிரிக்கப்பட்டு பரலோகத்திற்குச் சென்றதைக் கண்டு கண்ணீர் விட்டு, புலம்பி, புலம்பி ஒரு புலம்பல் பாடினான்.

என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமாய் இருந்தவரே என்று புலம்பினான் (2 இரா. 2 : 12). அதன்பின் எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய்,யோர்தானின் கரையிலே நின்று அந்த சால்வையைப் பிடித்து, எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லி யோர்தானின் தண்ணீரை அடித்தான். **எலிசா தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் உலர்ந்த தரையில் நடந்து, எலிசா யோர்தானின் இக்கரைப்பட்டான்.**

எலியா மற்றும் எலிசா தீர்க்கன்கள் கர்த்தர் மேல் கொண்ட விசுவாசத்தால் அநேக அற்புதங்களைச் செய்தனர். நண்பர்கள் போல வாழ்ந்த இரண்டு தீர்க்கன்களில் ஒருவர் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். மற்றொருவர் மரணமடைந்தார் (2 இரா. 13 : 20). **எலிசாவின் எலும்புகள் மீது ஒரு மனிதனின் பிரேதம் விழுந்தபோது அம்மனிதன் உயிர்பெற்றான்.** நம்முடைய ஊழியத்தின் பயன் நமது வாழ்க்கைக்குப் பின்னும் இருக்க முடியும். எனவே, கர்த்தருக்குப் பயப்படுபவர்களாக வாழ்ந்து நற்பணி செய்வோமாக. மரித்தவனின் எலும்புகள் மூலமாக அற்புதங்களைச் செய்யும் கர்த்தர் ஜீவனுள்ள நம் மூலம் செய்யமாட்டாரா? விசுவாசத்துடன் அற்புதங்களை எதிர்பார்ப்போமாக!

**<u>யோர்தானும் ஆசாரியர்களும்:</u>**

**“...கர்த்தரின் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும் என்றான் (யோசுவா 3 : 13).**

இஸ்ரவேல் ஜனங்கள் யோசுவாவுடன் சேர்ந்து சித்தீமிலிருந்து புறப்பட்டு, யோர்தான் மட்டும் வந்து இராத்தங்கினார்கள். அதன்பின் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் சுமந்து கொண்டு முன்னே சென்றார்கள். யோர்தானின் தண்ணீரிலே ஆசாரியர்களின் கால்கள் பட்ட உடனே என்ன நடக்கும் என்பதையும், கர்த்தர் என்ன ஒரு அற்புதத்தைச் செய்வார் என்பதையும் யோசுவா தெளிவாகக் கூறிவிடுகிறார்.

கர்த்தரின் உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து கொண்டு வந்த **ஆசாரியர்களின் கால்கள் யோர்தான் தண்ணீர் ஓரத்தில் பட்டவுடனே மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று ஒரு குவியலாகக் குவிந்தது.** கடலுக்கு ஓடி வருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று.

சகல இஸ்ரவேல் ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீர் இல்லாத தரையில் காலூன்றி நின்றார்கள். இருபது லட்சம் மக்களும் **தண்ணீரற்ற**

**உலர்ந்த தரைவழியாய் கடந்து போனார்கள்.** எத்தனை மணி நேரமாக – ஜனங்கள் கடந்து, நடந்து போகும் வரை, ஆசாரியர்கள் நின்றார்கள் என்பது கர்த்தருக்கு மட்டுமே தெரியும்.

செங்கடலைப் பிரிப்பதற்கு தேவன் காற்றை பயன்படுத்தினார். (யாத். 14 : 21) ஆனால், யோர்தானைப் பிளப்பதற்கு தேவன் ஒன்றையும் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக ஆசாரியர்களைப் பரிசுத்தப்படுத்தினார். நீரும், ஆறும் யாவும் சர்வ சிருஷ்டிகரை அறியுமல்லவா! அவரது கட்டளைக்கு கீழ்ப்படியுமல்லவா!!

மனிதனால் கூடாதது தேவனால் கூடும், தேவனால் செய்ய முடியாத அதிசயமான காரியம் உண்டோ? தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

ஜனங்கள் எல்லோரும் வெட்டாந்தரையில் நடந்து யோர்தானின் அக்கரை சேர்ந்த பின்பு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தான் நடுவிலிருந்து ஏறி, அவர்கள் உள்ளங்கால்கள் கரையில் ஊன்றிய போது, யோர்தானின் தண்ணீர் தங்களிடத்துக்குத் திரும்பி, முன்போல அதின் கரையெங்கும் புரண்டது.

சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் வல்லமை மற்றும் மகத்துவத்தை நம்மால் எண்ணிப் பார்க்கவே முடியாது. கர்த்தர் செய்த, செய்கிற, செய்யப்போகிற யாவும் வியப்பைத் தரும்.

முதல் தலைப்பிலே மீட்பின் நாயகனான மோசே பிறந்த மூன்றாம் மாதத்தில் நைல் நதியில் பெட்டியிலே மிதந்து வந்தவன். மோசே என்றால் நீரிலிருந்து எடுக்கப்பட்டவன் என்று அர்த்தம். தான் எப்படி நீரிலிருந்து காப்பாற்றப்பட்டானோ அதேபோல் தன்னை நம்பி, தேவன் ஒப்படைத்த மக்களை சிவந்த சமுத்திரத்திலிருந்து அக்கரைக்கு கொண்டு செல்ல வேண்டியது தன்னுடைய பொறுப்பு என்று உணர்ந்தான். தம்முடைய ஜனங்கள் கானான் தேசத்தை சென்றடைய வேண்டும் என்ற பெரிய வாஞ்சையானது மோசேயின் உள்ளத்தில் இருப்பதை அறிந்த நம் தேவாதி தேவன், செங்கடலைப் பிளந்து **உலர்ந்த தரையிலே** நடந்து கடந்து போகச் செய்தார்.

இரண்டாவது தலைப்பிலே தீர்க்கன்கள் யோர்தான் ஆற்றைக் கடக்க ஒரு சாதாரண சால்வையைக் கொண்டு தண்ணீரில் அடித்தபோது அது இருபக்கமாகப் பிரிந்தது. இருவரும் **உலர்ந்த தரைவழியாய்** அக்கரைக்குச் சென்றனர்.

மூன்றாவது தலைப்பிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து வந்த ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரில் பட்டமாத்திரத்தில் யோர்தானில் மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் ஒரு குவியலாகக் குவிந்தது. **தண்ணீரில்லாத தரையில்** காலூன்றி நின்றனர். இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீரற்ற **உலர்ந்த தரைவழியாய் கடந்து** போனார்கள்.

புதிய வருடத்தைக் கண்டு எத்தனை மாதங்களைக் கடந்தோம் என்பது பெரிதல்ல. எப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தர் நம்மை கடக்க, நடக்கச் செய்தார் என்பது தான் பெரியது. இயேசுவானவர் கடலின் மீது நடப்பதைக் கண்டு சீஷர்கள் கலக்கமடைந்தனர். அதே சமயம் பேதுரு, தான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்று கேட்ட போது, வா என்று இயேசுவானவர் கூறுகிறார். கடலின் மீது நடந்த ஒரே மனிதர் பேதுரு மட்டுமே.

பூமியிலுள்ள சகலத்தையும், மனிதனையும் படைத்தவர் நம் கர்த்தர். ஆகவே தான் அவரது சொல்லை அறிந்து கடல், ஆறு பிரிந்து போனது. நாமும் ஆண்டவரின் சொல்லைக் கேட்டு நடப்போமானால் ஆண்டவர் நம்முடைய வாழ்விலும் நாம் நம்பமுடியாத அதிசயமான பெரிய காரியங்களைச் செய்வார். அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருப்போம்.

ஆமென்.

**– திருமதி. பேர்ல் குயிலிராஜா**

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதிரிகளுக்கு சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக ஈஸ்டர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் (ஏசா. 43 : 21).**

கர்த்தர் மனிதனை இந்த பூமியில் படைத்ததின் முக்கிய நோக்கமே அவரை நாம் துதிக்கவும், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவுமே. தேவன் மனிதனை உண்டாக்குவதற்கு முன்பாகவே அவரை ஆராதிப்பதற்கென்று ஒரு தேவ தூதர்கள் கூட்டத்தை உருவாக்கியிருந்தார். அதற்கு லூசிபர் என்ற விழுந்துபோன தூதனே (சாத்தான்) தலைவனாயிருந்தான். பின்நாட்களில் அவன் பெருமை கொண்டு கர்த்தருக்கு மேலாக எனது சிங்காசனத்தை உயர்த்துவேன் என்றும், தேவனை ஆராதித்த கூட்டம், இனி தன்னை ஆராதிக்க வேண்டும் என்று எண்ணினான். தேவன் அவனையும், அவனுடன் சேர்ந்த அந்தக் கூட்டத்தையும் அவருடைய சந்நிதியிலிருந்து தள்ளினார். தள்ளப்பட்ட அந்த தூதர்களின் இடத்திற்கு மாற்றாக நம்மை வைக்கவே தேவன் நம்மைப் படைத்தார். படைக்கப்பட்ட நாம் எடுத்த உடனே பரலோகத்தில் வைக்கப்பட்டால் லூசிபரைப் போல நாமும் விழுந்து விடுவோம் என்று எண்ணி, நம்மை இந்தப் பூமியில் வாழச்செய்தார். இங்கு நாம் கர்த்தருக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்டு, தகுதிப்படுத்தப்பட்ட பின்பே, நாம் பரலோகத்தில் நித்திய நித்திய காலமாய் அவரோடு இருக்கும்படி நம்மை அங்கு நிலைப்படுத்துவார்.

ஏசாயா 29 : 13-ல் இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது என்று கர்த்தர் சொல்கிறார். அநேக கிறிஸ்தவர்களின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. தேவ ஆலயத்தில் நாம் ஆராதிக்கும் பொழுது மற்றவர்கள் முன்னிலையில் நீதிமான்களைப் போல் காணப்பட்டாலும், தனிப்பட்ட வாழ்க்கையில் நம்முடைய உள்ளான எண்ணங்களையும், கிரியைகளையும் கர்த்தர் மாத்திரமே அறிவார். கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவன் யார் என்று வேதத்தில் வாசிக்கும்பொழுது அது தாவீது என்று காண்கிறோம். ஏனென்றால் தாவீது எப்பொழுதும் கர்த்தரைத் துதித்து கொண்டிருப்பார். தாவீது அவருடைய வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருக்கும்பொழுதோ அல்லது பல நன்மைகளைப் பெற்றபொழுதோ மாத்திரம் கர்த்தரைத் துதிக்கவில்லை. மற்றவர்கள் அவரை அற்பமாய் நடத்தும் பொழுதும், தாழ்மையில் இருக்கும் பொழுது, துன்பங்களுக்கு நடுவிலும் கர்த்தரைத் துதித்தார். நம்முடைய தேவைகளுக்கும், நாம் பெற்ற நன்மைகளுக்கும் மாத்திரமே அவரை துதிக்காமல், உலகப் பிரகாரமான பாடுகளுக்கு மத்தியிலும் யோபுவைப் போல அவரை துதிக்க வேண்டும். அதைத்தான் தேவன் எதிர்பார்க்கிறார். அதுதான் தேவன் எதிர்பார்க்கிற உண்மையான அன்பு.

**இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி, கானானியரை எதிர்த்து யுத்தம் பண்ணும்படி, எங்களில் யார் முதலில் எழுந்து புறப்பட வேண்டும்**

**என்று கேட்டார்கள். அதற்கு கர்த்தர்: யூதா எழுந்து புறப்படக் கடவன்; இதோ அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக் கொடுத்தேன் என்றார் (நியா.1:1–2).**

யோசுவா மரித்தபின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்காக கர்த்தரிடம் இப்படியாகக் கேட்டார்கள். கர்த்தர் ஏன் யூதா கோத்திரத்தை முதலில் போகச் சொன்னார்? யூதா என்பதற்கு துதி என்று அர்த்தம். எந்த ஒரு ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வதற்கும் முன்பாக, அதில் தடைகள் மாற நாம் துதிக்க வேண்டும். தேவ ஜனங்களின் துதியினாலே எரிகோ பட்டணத்தின் அலங்கம் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் எளிதாக இடிந்து விழுந்தது. யோசபாத் என்னும் யூதா ராஜாவிற்கு விரோதமாக மோவாபியரும், அம்மோனியரும் யுத்தம் பண்ண வந்தார்கள். அப்பொழுது யோசபாத் ராஜா தன்னுடைய படைகளுக்கு முன்பாக கர்த்தரை புகழ்ந்துபாட பாடகர்களை ஏற்படுத்தினான். அவர்கள் துதி செய்ய தொடங்கியதும், எதிரிகள் தங்களுக்குள் ஒருவரையொருவர் தாக்கி அழிந்தார்கள். நாம் கர்த்தரை துதிக்கும்பொழுதெல்லாம் எதிரிகளைக் கர்த்தர் முறியடிப்பார். ஆலயத்திலும், நம்முடைய தனிப்பட்ட ஜெபவேளையில் மாத்திரம் அல்ல, வேலை ஸ்தலங்களிலும், நம்முடைய பிரயாணங்களிலும், சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் அவரைத் துதிப்போம்.

**''கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்" (சங். 34:1).**

கடந்த பிப்ரவரி மாதம் 8–ஆம் தேதியன்று கோவை, கவுண்டம்பாளையம் சி.எஸ்.ஐ. பால்ஸ் சபையில் IBT சார்பாக திரு. S. ராஜசேகரன் அவர்கள் தேவசெய்தியளிக்க சகோ. கிதியோன் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். அந்நாளில் சபை மக்கள் திரளாய்ப் பங்கு பெற்று, IBT வெளியீடு இலக்கியப் புத்தகங்களை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றார்கள். திரு. S. ராஜசேகரன் அவர்கள் அச்சபையின் ஆண்கள் கூடுகையிலும் கலந்து தேவ செய்தியளித்தார். இதே மாதம் 20, 21, 22 ஆகிய தேதிகளில் ஈரோடு கிருஷ்ணம்பாளையம், C.S.I. சபை லெந்துகாலக் கூட்டத்தில் ஈரோடு பிரதிநிதிகள் திரு. D. ரவி, திரு. ராஜன் தங்கத்துரை, திரு. செல்வராஜ் ஆகியோர் தேவ செய்தியும், ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள்.

சந்தர்ப்பம் அளித்த சபை ஆயர், செயலர், பொருளர் மற்றும் பங்கு பெற்ற சபை மக்களுக்கு IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

இதுவரை நீங்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள சபைகளில் IBT ஊழியம் அறிமுகப்படுத்தா–திருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். இது ஊழியம் வளருவதற்கும், தேவ நாமம் மகிமைப்படுவதற்கும் ஏதுவாக அமையும். தொடர்ந்து நீங்கள் IBT ஊழியத்திற்கு உங்கள் பங்களிப்பைக் கொடுத்து வருவதற்காக நன்றியைத் தெரிவிக்கிறோம்.

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகப் பண்ணுவாராக!

"ஷாலோம்"

கர்த்தருக்குள் அன்பான
உங்கள் சகோதரன்
**K. ஜெய்சிங்**

# பணித்தளச் செய்திகள்

**மிஷனெரி : சகோ. சஞ்சய்குமார்**
**பணித்தளம் : சட்டர்ப்பூர் (மத்தியப்பிரதேசம்)**

தேவனுக்கு மகிமையுண்டாவதாக!

கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக திரியா மொஹல்லா, பன்னா ரோடு, பன்வாடி, பச்சான், மஹோபா சண்ட்லா, சோர்வாய், விஷ்வநாத் காலனி,பன்டா, கவுதம் நகர், அயோத்தியா பஸ்தி, மஹராஜ்பூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று பலரைச் சந்தித்து, நற்செய்தியை அறிவித்து, நற்செய்திப் புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளைக் கொடுத்து, ஜெபித்து வந்தேன். சகோ. சந்தோஷ் பன்சால், பாபுலால் பன்சால், சகோதரிகள் பபாலி பன்சால் மற்றும் கமலா பன்சால் ஆகியோரை புதிதாக சந்தித்து இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பேசினேன். இவர்கள் வாஞ்சையுடன் கேட்டார்கள். ஞாயிறு ஆராதனை கவுதம் நகரில் வழக்கப்படி நடத்தப்பட்டது. உபவாச ஜெபக்கூட்டம் சட்டர்ப்பூர் பணித்தளத்தில் நடத்தப்பட்டது. என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

--------------------

**முன்னேற்றப் பணியாளர் : சகோ.சாம் எபிநேசர்**
**பணித்தளம் : மேட்டுப்பாளையம் (தமிழ்நாடு)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தர் கொடுத்த பெலத்தினால் கடந்த மாதம் முன்னேற்றப் பணியையும், அலுவலகப் பணியையும் நல்ல முறையில் செய்தேன். முதல் வாரத்தில் அலுவலகத்தில் பத்திரிகை அனுப்பும் ஆயத்தப் பணிகளும் அதன்பின் பத்திரிகை போஸ்டிங் மற்றும் அலுவலகத்தில் இதரப் பணிகளும் செய்தேன். தாங்குநர்களில் சிலர் தாமாகவே முன்வந்து காணிக்கையை உயர்த்திக் கொடுத்தார்கள். சகோ. கிதியோன் (கோவை முன்னேற்றப் பணியாளர்) என்னையும், மேலும் பிற ஊர்களில் முன்னேற்றப் பணியாளர்களாக பணிபுரிந்து வரும் சகோதரர்கள் மூவரையும் பல சபைகளுக்குக் கூட்டிச் சென்று ஆயர்களுடன் அணுகுமுறையைக் கற்றுக் கொடுத்தார். அதில் பங்கேற்ற எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

முன்னேற்றப்பணிக்காக மேட்டுப்-பாளையத்தில் Teachers Colony, காட்டூர், சங்கர் நகர், K.K. நகர், மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, சிவன்புரம், சேரன் நகர், வேளாங்கண்ணி, சங்கர் நகர், சிறுமுகை, இளுப்பபாளையம், பழைய சந்தை, கண் மருத்துவமனை, குந்தா காலனி, காரமடை, தந்தை பெரியார் வீதி ஆகிய இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கை பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். முன்னேற்றப் பணியில் புதிய தாங்குநர்கள் கிடைக்கவும், சபைகளில் IBT ஊழியத்திற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கவும், அனுதினப் பயணத்தில் கர்த்தர் பாதுகாப்பைக் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

--------------------

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. அசரியா மாதுரி**
**மொழி : தெலுங்கு**
**பணித்தளம் : பொடியா (ஒடிஷா)**

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

மொழிபெயர்ப்புப் பணியில், சிறுவர் வேதாகமத்தை தெலுங்கு மொழியில் மொழிபெயர்ப்பு செய்கிறேன். இது வேதாகமக் கதைகளை தொகுத்து எழுதப்படுகிறது. தேவையான இடங்களுக்கு ஏற்ற படங்களை சேர்ப்பதும், சரிபார்ப்பு செய்வதும், தொகுக்கப் பட்டவைகளை திரும்ப வாசித்து பிழைகளைத் திருத்தி, சரி செய்வதும் அடங்கும். தற்போது, இறுதி சரிபார்ப்புப் பணி நடந்து வருகிறது. கடந்த ஜனவரி மாதம் 12-ஆம் தேதி முதல் 17-ஆம் தேதி வரை

ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற மொழிபெயர்ப்பு சரிபார்ப்புப் பணிக்காக சென்றிருந்தேன். அதில் பல மொழி பெயர்ப்பாளர்களும் கலந்து கொண்டார்கள். எங்கள் பணியை IMS மிஷனெரிகள் திரு. ஐசக் மற்றும் திருமதி. கிரிஜா ஐசக் ஆகியோர் மேற்பார்வை செய்தார்கள்.

மிஷனெரிப் பணிக்காக முச்சிகிகுடா, மோட்டம்குடா, சாந்தி நகர், பந்தல்குடா, கம்மரிகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். நற்செய்திப் புத்தகம் மற்றும் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

------------------

**மொழிபெயர்ப்பாளர் : சகோதரி லதா ராமசந்திரப்பா**

**மொழி : போவி**

**பணித்தளம் : ஹவேரி (கர்நாடகா)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் Paratext Software-இல் பழைய ஏற்பாடு புத்தகம் சங்கீதம் கீ-இன் செய்து முடிக்கப்பட்டு, சரிபார்ப்புப் பணி நடந்து வருகிறது. இதில் Foot Note Marking, Cross reference, Biblical Terms, Parrallel Passages, Paragraph Setting ஆகியன செய்யப்பட்டு வருகின்றன.

போவி மொழியில் வெளியிடப்பட்ட புதிய ஏற்பாடு, விநியோகம் நடந்து வருகிறது. இதுவரை 750 புத்தகங்கள் இம்மொழி பேசும் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. புத்தகங்களை வாங்கிய அனைவரும் அனுதினமும் வாசித்து கர்த்தருக்குள் வளரவும், என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் பிள்ளைகள் படிப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**மிஷனெரி : சகோ. பட்டிராஜ்**

**பணித்தளம் : செலாம்பூர் (உத்திரப் பிரதேசம்)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

மிஷனெரிப் பணிக்காக கடந்த மாதம் தனவதி, மகஹரா, முசாலா, பைஷி, சந்த்பூர், மாலிப்பூர், பிப்பாரா ஆகிய இடங்களுக்குச் சென்று பலரைச் சந்தித்து நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகள் மற்றும் நற்செய்திப் புத்தகங்களை விநியோகித்தேன். சகோ. அனு, சுரசதி, ராஜேந்தர், ராகுல்குமார் மற்றும் சகோதரி சந்தியா ஆகியோர் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள். சுகவீனத்துடன் இருந்த அர்ச்சனா, ரீட்டா மற்றும் மாதுரி ஆகியோரின் சுகத்திற்காக ஜெபித்தேன். ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் இவர்களுக்கு நல்ல சுகத்தை அருளிச் செய்தார்.

இது தவிர ஞாயிற்றுக்கிழமைகளில் செலாம்பூர் பணித்தளத்தில் ஞாயிறு ஆராதனையும், உபவாச ஜெபக்கூட்டம், வீட்டு ஜெபக்கூட்டம் ஆகியன நடத்தப்பட்டன. செலாம்பூர், தியோரியா பணித்தளங்களில் நடத்தப்படும் மிஷனெரிப் பணிகளில் தடைகள், உபத்திரவங்கள் வராமலிருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

------------------

**முன்னேற்றப் பணியாளர் : சகோ. பால் ஜெயசுதன்**

**பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)**

கர்த்தர் கிருபையினால் கடந்த மாதம் முழுவதுமாக திருச்சி மாவட்டத்தில் IBT முன்னேற்றப் பணியை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஒவ்வொரு தாங்குநர்களையும் சந்தித்து, அவர்கள் குடும்பத்தை விசாரித்து, இந்த மாதம் ஜெபித்த விண்ணப்பங்களுக்கு கர்த்தர் பதில் தந்தார் என அறிந்து, அவர்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். அன்னாளின் ஜெபத்திற்கு கர்த்தர் மறவாமல் நினைத்தருளி பதிலைத் தந்தது போல, ஒவ்வொரு தாங்குநர்களின் விண்ணப்பங்களை நினைத்தருளி அவர்கள்

ஜெபத்திற்கு பதிலைத் தந்தார். இன்னும் ஒரு சில தாங்குநர்கள் தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வருகிறார்கள்; அவர்களுக்காகவும் ஜெபித்து வருகிறேன். ஒரு சில தாங்குநர்கள் குடும்பப் பிரச்சனை காரணமாக ஜெபிக்க கேட்டுக் கொண்டனர். அவர்களுக்காகவும் ஊக்கமாக ஜெபித்தேன். திருமண காரியம் மற்றும் குழந்தையின்மைக்காகவும் ஜெபிக்க கேட்டுக் கொண்டனர். அதற்காகவும் தொடர்ந்து ஜெபித்து வருகிறேன். முன்னேற்றக் கூட்டம் நடத்தவும் தொடர்ந்து முயற்சி செய்து கேட்டு வருகிறேன். புதிய மொழிபெயர்ப்பு காரியங்களைப் பற்றி தாங்குநர்களிடம் சொல்லி அதற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதுபோல ஆடியோ பதிவு அடங்கிய புதிய ஏற்பாடு சிறுவர் வேதாகமம் மற்றும் சமுதாயப் பணிகளைப் பற்றியும், மிஷனெரிப் பணிகளையும், இலக்கியப் பணியைப் பற்றியும் தாங்குநர்களுக்கு சொல்லி, அதற்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். இன்னும் IBT ஊழியத்தின் தரிசனமான 200 மொழி திட்டத்தில் விரைந்து மொழிபெயர்ப்புப் பணிகள் முடிக்கப்பட ஒவ்வொரு நாளும் ஜெபித்து வருகிறேன். இன்னும் ஊழியத்தின் விரிவாக்கப் பணிக்காக முயற்சி செய்து வருகிறேன். எனக்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். கர்த்தரின் கிருபை என்றுமுள்ளது.

---

# மேசியாவின் பாடுகள்

**ஏசாயா 53, லெந்து காலங்களில் அனுதினமும் வாசித்து தியானிக்க வேண்டிய மிக முக்கியமான வேத பகுதியாகும். முடிந்தவரை மனப்பாடம் செய்வது மிக நல்லது.**

1. **எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?**

2. **இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.**

3. **அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவரு–மாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.**

4. **மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**

5. **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.**

6. **நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.**

7. **அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை**

மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

8. இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

9. துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

10. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

11. அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.

12. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.

# உலகச் செய்திகள்

1. நெதர்லாந்து நாட்டின் புதிய பிரதமராக ராப் ஜெட்டன் பிப்ரவரி 23-ஆம் தேதி பதவியேற்றார். இதன் மூலம் நெதர்லாந்து வரலாற்றிலேயே மிகக்குறைந்த வயதில் (38) பிரதமர் நாற்காலியில் அமரும் பெருமையை அவர் பெற்றுள்ளார்.

2. அமெரிக்க-இஸ்ரேல் கூட்டாக நடத்திய அதிரடி தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவரான தலைமை மதகுரு அப்துல்ல அலிகமேனி (86) கொல்லப்பட்டார். அவரது கொலைக்குப் பழிதீர்க்க இதுவரை இல்லாத அளவில் தீவிர பதிலடி தாக்குதலைத் தொடுப்போம் என்று ஈரான் சூளுரைத்தது.

3. ஐரோப்பிய கண்டத்தில் 2-ஆம் உலகப்போருக்குப் பிறகு மாபெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்திய ரஷ்யா-உக்ரைன் போர் 4 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. எனினும், இந்தச் சண்டையால் துப்பாக்கிச் சத்தங்களும், பீரங்கி முழக்கங்களும் இன்னும் ஓயவில்லை. இருதரப்பிலும் உயிரிழந்தோர், படுகாயமடைந்தோர்களின் எண்ணிக்கை பல லட்சங்களைத் தாண்டியுள்ளது.

4. நாட்டின் முன்னணி மின்சார இருசக்கர வாகன உற்பத்தியாளரான ஓலா எலக்ட்ரிக் நிறுவனம், செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் தனது நேரடி விற்பனை மையங்களின் எண்ணிக்கையை 550-ஆக குறைக்க முடிவு செய்துள்ளது.

5. டில்லி ஓபன் ஏடிபி 75 சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் கிரீஸ் வீரர் ஸ்டெஃப்பனோஸ் சாகேலாரிடிஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.

6. கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் நம்பர் 1 வீரர் கார்லோஸ் அல்கராஸ் ஆதிக்கம் செலுத்தி சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார்.

# எமது தரிசனமும், எமது பணியும்

<u>எமது தரிசனம் :</u> “இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே”

<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் “ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை” அமைத்து அனுப்புதல்.

# தேவை

சென்னையிலே பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **<u>STATE BANK OF INDIA</u>**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **<u>INDIAN BANK</u>**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. IBT ஊழியத்திற்கு ஊழிய பாரமுள்ள தாங்குநர்களைக் கர்த்தர் கடந்த வருடங்களில் தந்து, ஏற்ற நேரத்தில் அச்சிடும் பணிகள் நடந்ததற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். உதவிக்கரம் கொடுத்த அனைத்துத் தாங்குநர்களின் குடும்பங்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும், இனிமேல் நடக்கவுள்ள பணிகளின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

2. மொழிபெயர்ப்புப் பணிகளுக்கு சரிபார்ப்புச் செய்து உதவி வரும் BSI, Wycliffe India மற்றும் IMS ஊழிய ஆலோசகர்களுக்காக கர்த்தரைத் துதிப்போம். இவர்களின் பங்களிப்பு தொடர்ந்து கிடைக்கவும், சரிபார்ப்புப் பணிகள் இவர்களின் ஆலோசனைப்படி மொழிபெயர்ப்பாளர்கள் காலதாமதமின்றி, துரிதமாக தங்கள் பணிகளைச் செய்ய ஜெபியுங்கள்.

3. கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களின் சரிபார்ப்புப் பணிகள் திட்டமிட்டபடியாக நடந்ததற்காக கர்த்தரைத் துதிப்போம். 13 மொழிபெயர்ப்பாளர்களின் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் சரிபார்ப்பு பணிகள் மீண்டும் இம்மாதம் 20 முதல் 25-ஆம் தேதி வரையிலும், ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்திலும், 5 மொழிபெயர்ப்பாளர்களின் சரிபார்ப்புப் பணிகள் வரும் ஜுலை மாதம் 6-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை கோவை IBT மையத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. இது தடைபடாமல் நடக்க ஜெபியுங்கள்.

4. மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுவரும் மொழிபெயரப்பாளர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுக்க ஜெபியுங்கள். ஒருசிலரின் சுகவீனத்தாலும், குடும்ப உறுப்பினர்களின் சுகவீனத்தாலும் கடந்த மாதங்களில் குறிப்பிட்ட மொழி பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இவர்களின் நலனுக்காக ஜெபியுங்கள்.

**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 3527370
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBINO282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Editor & Published by On behalf of
**Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by
**Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.

**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd April 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**